பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

23 09 2022 **FRIDAY** **12.40 PM**

ஆகாஷவாணி

## தலைப்புச் செய்திகள்

1. சுற்றுச்சூழலுக்கு உகந்த தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துவதில் இந்தியா அக்கறையுடன் செயல்பட்டு வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. பிரதமர் திரு நரேந்திர மோடியின் உரை தொகுப்பு அடங்கிய புத்தகம் இன்று வெளியிடப்பட்டது.

3. தமிழகத்தில் எந்த பகுதியில் இருந்தும் இணையவழி மூலமாக பட்டாவுக்கு விண்ணப்பிக்கும் வசதியை முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் இன்று தொடங்கிவைத்தார்.

4. வடமாநிலங்களில் பெய்துவரும் கனமழையால் மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

5. இந்தியா – ஆஸ்திரேலியா இடையேயான இரண்டாவது டுவென்டி – டுவென்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

--- *இனி விரிவான செய்திகள்* --

<<<<<<>>>>>

சுற்றுச்சூழலுக்கு உகந்த பாரம்பரியமும், கலாச்சாரமும் இந்தியர்களின் வாழ்க்கையுடன் ஒன்றியுள்ளதாகவும், அதனையொட்டிய பொருளாதாரம் மக்களின் வாழ்க்கையுடன் இணைந்ததாகும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

மாநில சுற்றுச்சூழல் துறை அமைச்சர்கள் தேசிய மாநாட்டில் பேசிய அவர், சுற்றுச்சூழலுக்கு உகந்த நடவடிக்கைகளை அனைத்து வகையிலும் மத்திய அரசு மேற்கொண்டு வருவதாக குறிப்பிட்டார்.

குறிப்பாக, அழிந்துவரும் இனங்களை பாதுகாப்பதில் அரசு கவனம் செலுத்தி வருவதாக அவர் கூறினார்.

குஜராத் மாநிலத்தின் கிர் வனப்பகுதியில் சிங்கம், புலி போன்றவை பாதுகாக்கப்பட்டுள்ளதாகவும், வனங்களில் வாழும் உயிரினங்களான யானை, சிறுத்தை வகைகள், ஒற்றைக்கொம்பு காண்டாமிருகம் போன்ற இனங்களை பாதுகாத்து, இனவிருத்திப்பணிகளை அரசு மேற்கொண்டு வருவதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

சர்வதேச அளவில் சுற்றுச்சூழல் தொடர்பான உடன்பாடுகளை நிறைவேற்றுதில் அரசு அக்கறை கொண்டுள்ளதாகவும், பசுமை சூழலை பாதிக்கும் செயல்களுக்கு ஊக்கம் தரப்படுவதில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

அண்மையில் நமீபியாவிலிருந்து அழிந்துவரும் இனமான சிறுத்தைகள் இந்தியா கொண்டுவரப்பட்டதை அவர் சுட்டிக்காட்டினார்.

சூரிய சக்தியால் இயங்கும் தொழில்நுட்பத்தை அதிகம் பயன்படுத்த அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக கூறிய பிரதமர், சர்வதேச சூரிய எரிசக்தி இயக்கத்திற்கு இந்தியா தலைமை வகித்து வருவதாக பெருமிதம் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடியின் உரை தொகுப்பு அடங்கிய புத்தகம் இன்று வெளியிடப்பட்டது.

புதுதில்லி ஆகாஷ்வாணி பவனில் நடைபெற்ற நிகழ்ச்சியில், குடியரசு முன்னாள் துணைத்தலைவர் திரு வெங்கையா நாயுடு, கேரள மாநில ஆளுநர் திரு ஆரிஃப் முகமது கான், மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு அனுராக் தாக்கூர் ஆகியோர் இந்த புத்தக தொகுப்புகளை வெளியிட்டனர்.

2019- ஆண்டு மே மாதம் முதல், 2020 மே மாதம் வரையில் பிரதமர் திரு நரேந்திர மோடி ஆற்றிய உரைகள் இந்த தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

புதிய இந்தியாவை பற்றி பிரதமரின் கருத்துக்கள் அனைத்தும் இந்த தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

<<<<<<>>>>>

பீகாரில் பிஜேபி கூட்டணியிலிருந்து, ஐக்கிய ஜனதாதள் கட்சி விலகியதையடுத்து, முதல் முறையாக அம்மாநிலத்திற்கு பிஜேபி-யின் மூத்த தலைவரும், மத்திய உள்துறை அமைச்சருமான திரு அமித் ஷா இரண்டு நாள் பயணம் மேற்கொள்கிறார்.

பீகார் மாநிலம் புர்னியாவில் இன்று மாலை நடைபெறும் பொதுக்கூட்டத்தில் அவர் உரையாற்றுகிறார்.

இன்று மதியம் கிஷான்கஞ்சில் பிஜேபி நாடாளுமன்ற உறுப்பினர்களளையும், சட்டப்பேரவை உறுப்பினர்களையும் அவர் சந்திக்கவுள்ளார்.

கிஷான் கஞ்சில் உள்ள எல்லை பாதுகாப்பு முகாமில், பாதுகாப்பு தொடர்பான ஆலோசனைகளையும் திரு அமித் ஷா மேற்கொள்ளவிருப்பதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

<<<<<<>>>>>

வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், பிரிக்ஸ் நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்கள் கூட்டத்தில் பங்கேற்றார்.

தென்னாப்பிரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் **Naledi** பண்டோர் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

அடுத்த ஆண்டு பிரிக்ஸ் கூட்டமைப்புக்கு தென்னாப்பிரிக்க தலைமை ஏற்கவுள்ள நிலையில், கூட்டம் தொடர்பானவை குறித்து விவாதங்கள் மேற்கொள்ளப்பட்டன.

ஐ நா அமைப்பின்கீழ், அரசியல், பாதுகாப்பு, பொருளாதாரம், நிதி மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த நிலைப்பாடு, போன்றவை குறித்து இக்கூட்டத்தில் ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது.

பயங்கரவாதம், தீவிரவாத எதிர்ப்பு உடன்பாட்டை அனைத்து நாடுகளும் வெற்றிகரமாக செயல்படுத்துவதற்கு உறுதியான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்று திரு ஜெய்சங்கர் கூறினார்.

உக்ரைனில் அமைதி திரும்புவதற்கு உகந்த சூழலை ஏற்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

<<<<<<>>>>>

வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், பிரேசில், ஜப்பான், ஜெர்மனி நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்களை இன்று சந்தித்தார்.

பலதரப்பட்ட உறவுகளை புதுப்பிக்க வேண்டும் என்றும், உலகம் முழுவதும் நிச்சயமற்ற சூழல் உருவாகியுள்ள நிலையில், பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

<<<<<<>>>>>

அகில இந்திய வானொலி 75 ஆண்டுகால பயணத்தில் மக்களுக்கு அளித்து வரும் சேவை தொகுப்பில் இன்று இடம்பெறுவது ‘எளிமையாக வர்த்தகம் செய்தல் ’ பற்றியதாகும்.

*(வாய்ஸ் பைட் - 135 செகண்ட்ஸ்)*

அகில இந்திய வானொலியின் இந்த “சிறப்பு தொகுப்பினை” எமது சமுக வலைதளங்களிலும் காணலாம்.

<<<<<<>>>>>

தமிழகத்தில் எந்த பகுதியில் இருந்தும் பட்டா வசதிகளை பெறுவதற்கான இணையதளத்தை முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் இன்று தொடங்கிவைத்தார்.

**tamilnilam.tn.gov.in** என்ற இணையதளத்தில் இதற்கான வசதியை பெறலாம்.

<<<<<<>>>>>

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து வரும் 26-ஆம் தேதி முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் தலைமையில் ஆலோசனை நடைபெறும் என்று மாநில அரசு தெரிவித்துள்ளது.

வெள்ளநீர் ஏற்படும் பகுதிகளை அடையாளம் காணுதல், மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகளை துரிதப்படுத்துதல் போன்றவை குறித்து ஆலோசனை மேற்கொள்ளப்படும்.

இக்கூட்டத்தில், பல்வேறு துறைகளின் உயரதிகாரிகளும், மாவட்ட ஆட்சியர்களும் கலந்துகொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

<<<<<<>>>>>

வடமாநிலங்களில் கடந்த சில நாட்களாக கனமழை பெய்துவருவதையடுத்து, மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

உத்தரகாண்ட் மாநிலத்தில் பெய்த கனமழையால் தேசிய நெடுஞ்சாலைகளில் மண்சரிவு ஏற்பட்டதால், போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

தலைநகர் தில்லியிலும் கனமழை தொடர்வதையடுத்து, வேலைக்கு செல்லும் மக்கள் பெரிதும் அவதிப்பட்டனர்.

தில்லி சாலைகளில் வெள்ளநீர் பெருகியதைடுத்து, போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டது.

மழை மேலும் தொடரும் என்ற அறிவிப்பையடுத்து, மக்கள் எச்சரிக்கையுடன் இருக்குமாறு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

ஹரியானா, உத்தரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களிலும் கனமழை பெய்து வருகிறது.

உத்தரப்பிரதேச மாநிலம் நொய்டாவில் பள்ளிகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.

ஹரியானா மாநிலம் குர்கானில் மக்கள் வீடுகளிலிருந்தே வேலை பார்க்கும்படி தனியார் நிறுவனங்கள் அறிவுறுத்தியுள்ளன.

உத்தரப்பிரதேச மாநிலத்தில் பெய்துவரும் கனமழையால், தாழ்வான பகுதிகளில் வெள்ளநீர் சூழ்ந்துள்ளது.

மழை தொடர்பான விபத்துகளில் 7 பேர் உயிரிழந்துள்ளனர்.

தாழ்வான பகுதிகளில் வசிப்பவர்கள் பாதுகாப்பாக இருக்குமாறு அம்மாநில அரசு அறிவுறுத்தியுள்ளது.

நதிகளில் ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கால் மக்கள் பாதிக்கப்படாமல் இருப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள மாவட்ட நிர்வாகங்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளன.

<<<<<<>>>>>

உலக சைகை மொழி தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

பேச்சு மற்றும் செவித்திறனை இழந்தவர்கள் பயன்பெறுவதற்கு ஏதுவாக, சைகை மொழி உருவாக்கப்பட்டது.

ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 23-ஆம் தேதி உலக சைகை மொழி தினமாக கடைபிடிக்க வேண்டும் என்று ஐ நா அறிவித்ததையடுத்து, இந்தியாவும் அதில் இணைந்து கொண்டது.

இந்நாளையொட்டி, மத்திய – மாநில அரசுகளின் சமூக நலத்துறை மூலம் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

புதுதில்லியில் **ncert** தயாரித்துள்ள 6-ஆம் வகுப்பு புத்தகங்கள், இந்திய சைகை மொழி செயலி ஆகியவை இன்று வெளியிடப்படுகின்றன. தேசிய புத்தக நிறுவனத்தின் 500 புத்தகங்களும், வீர் கதா புத்தகங்களும் சைகை மொழியில் இன்று வெளியிடப்படுகின்றன.

விடுதலை பெருவிழாவின் ஒரு பகுதியாக, 3 ஆயிரத்து 200 அமைப்புகளின் மூலம் சைகை மொழி தின நிகழ்ச்சிகளை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

***விளையாட்டுச் செய்தி***

இந்தியா – ஆஸ்திரேலியா இடையேயான இரண்டாவது டுவென்டி – டுவென்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

நாக்பூரில் நடைபெறவுள்ள இப்போட்டி இரவு 7 மணிக்கு தொடங்குகிறது.

மூன்று போட்டிகளை கொண்ட இந்த தொடரின் முதல் ஆட்டத்தில் வெற்றிபெற்று ஆஸ்திரேலியா முன்னிலை பெற்றுள்ளது.

<<<<<<>>>>>